**செய்தி வெளியீடு எண்:275** **நாள் : 10.06.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நீலகிரி மாவட்டம் – குன்னூர் நகராட்சியில் 13 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் துவக்கி வைத்தார்கள். மேலும், 49 கோடியே 36 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலகக் கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், நவீன சுகாதார வளாகங்கள், திருமண மண்டபம், பூங்கா, வணிக வளாகம், மேம்படுத்தப்பட்ட வாரச் சந்தை, எல்.இ.டி. தெரு விளக்குகள் ஆகியவற்றை திறந்து வைத்து, 59 கோடியே 87 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை துவக்கி வைத்தார்கள்.

பொது மக்கள் நலன் கருதியும், அலுவலர்கள் சிரமமின்றி பணியாற்றுவதற்கு ஏதுவாகவும், போதிய இடவசதி மற்றும் அடிப்படை வசதியின்றி இயங்கி வரும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்திட குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள், சிறு நகரங்கள் மற்றும் கிராமப் புறங்களில் வாழும் மக்களின் சுற்றுப்புற சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நவீன சுகாதார வளாகங்கள் அமைத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பேருந்து நிலையங்கள், வணிக வளாகம், வாரச் சந்தை, பூங்கா போன்ற அடிப்படை தேவைகளை நிறைவேற்றுதல் ஆகிய பல்வேறு சிறப்பான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, நீலகிரி மாவட்டம் – குன்னூர் நகராட்சியில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 13 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மேலும், நீலகிரி மாவட்டம் – ஜெகதளா பேரூராட்சியில் 1 கோடியே 64 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருநெல்வேலி மாவட்டம் – பத்தமடை பேரூராட்சியில் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பாளையங்கோட்டை ஒன்றியம், கீழநத்தம் ஊராட்சியில் 99 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்; மதுரை மாவட்டம் – சோழவந்தான் பேரூராட்சியில் 5 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்பட்ட குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – மாமல்லபுரம் பேரூராட்சியில் 8 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தேனி மாவட்டம் – தேனி–அல்லிநகரம் நகராட்சியில் 42 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்கள்;

என மொத்தம் 73 கோடியே 72 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தஞ்சாவூரில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல நகராட்சி நிருவாக இயக்குநரக அலுவலகக் கட்டடம்; புதுக்கோட்டை நகராட்சியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; வேலூர் மாவட்டம் – இராணிப்பேட்டை நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூர் நகராட்சியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி நகராட்சியில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலகக் கட்டடங்கள்;

திருவள்ளூர் மாவட்டம் – கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருநெல்வேலி மாவட்டம் – களக்காடு மற்றும் திருக்குறுங்குடி பேரூராட்சிகளில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; நீலகிரி மாவட்டம் – கோத்தகிரி பேரூராட்சியில் 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; மதுரை மாவட்டம் – எழுமலை பேரூராட்சியில் 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடங்கள்;

திருநெல்வேலி சாந்தி நகரில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகக் கட்டடம் என 20 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 அலுவலகக் கட்டடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம் – திருவத்திபுரம் நகராட்சியில் 2 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; ஈரோடு மாவட்டம் – புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; நீலகிரி மாவட்டம் – நெல்லியாளம் நகராட்சியில் 2 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருப்பூர் மாவட்டம் – பல்லடம் நகராட்சி மற்றும் ருத்ராவதி பேரூராட்சியில் 2 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; என 10 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 பேருந்து நிலையங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – கெலமங்கலம் பேரூராட்சியில் 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; தஞ்சாவூர் மாவட்டம் – மேலத்திருப்பன்துருத்தி, வல்லம், பெருமகளூர் மற்றும் திருக்காட்டுப்பள்ளி ஆகிய பேரூராட்சிகளில் 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருவாரூர் மாவட்டம் – நன்னிலம் பேரூராட்சியில் 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம், மேட்டுப்பாளையம், சமயபுரம் கண்ணனூர், தாத்தையங்கார்பேட்டை, சிறுகமணி, பூவாளூர், பொன்னம்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் 3 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; பெரம்பலூர் மாவட்டம் – குரும்பலூர் பேரூராட்சியில் 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; புதுக்கோட்டை மாவட்டம்– கறம்பக்குடி மற்றும் கீரமங்கலம் பேரூராட்சிகளில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; அரியலூர் மாவட்டம் – வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; என 6 கோடியே 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 47 நவீன சுகாதார வளாகங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – மேற்கு தாம்பரத்தில் 2 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட அம்பேத்கர் திருமண மண்டபம் மற்றும் கிழக்கு தாம்பரத்தில் 1 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட காந்தி பூங்கா; திருப்பூர் மாவட்டம் – மடத்துக்குளம் பேரூராட்சியில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கட்டடம்; கிருஷ்ணகிரி மாவட்டம் – காவேரிபட்டணம் பேரூராட்சியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட வாரச் சந்தை;

கோயம்புத்தூர் மாநகராட்சி – உக்கடம் பெரியகுளம் கரையில் 4 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இலகுரக வாகனப் பாதை மற்றும் பாலக்காடு சாலை – ஆத்துப்பாலம் சந்திப்பு முதல் மாநகராட்சி எல்லை வரையில் 5.10 கிலோ மீட்டர் நீளத்திற்கு 2 கோடியே 98 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 408 எல்.இ.டி. தெரு விளக்குகள்;

என மொத்தம் 49 கோடியே 36 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான அலுவலகக் கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், இலகுரக வாகன பாதை, நவீன சுகாதார வளாகங்கள், திருமண மண்டபம், பூங்கா, வணிக வளாகம், மேம்படுத்தப்பட்ட வாரச் சந்தை, எல்.இ.டி. தெரு விளக்குகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திறந்தும், துவக்கியும் வைத்த திட்டங்களின் மொத்த மதிப்பு 123 கோடியே 8 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு கோ.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 10.6.2015